12.05.16

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## நீர்பிடிப்பு பகுதியில் மழை நீடிப்பு: பாபநாசம், மணிமுத்தாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

**திருநெல்வேலி:** மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியிலும் மழை தொடர்ந்து பெய்து வருவதால் அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு: பாபநாசம் அணை-31 மி.மீ, பாபநாசம் கீழ் அணை-18 மி.மீ, சேர்வலாறு அணை-15 மி.மீ, மணிமுத்தாறு அணை-19.4 மி.மீ, கடனாநதி அணை-1 மி.மீ, ராமநதி அணை-11 மி.மீ, கருப்பாநதி அணை-27 மி.மீ, குண்டாறு அணை-28 மி.மீ, அடவிநயினார் அணை-10 மி.மீ, கன்னடியன் அணைக்கட்டு-22 மி.மீ,

வடக்குப்பச்சையாறு அணை-2 மி.மீ, நம்பியாறு அணை-5 மி.மீ, அம்பாசமுத்திரம்-28.2 மி.மீ, ஆய்குடி-15.2 மி.மீ, சேரன்மகாதேவி-22 மி.மீ, பாளையங்கோட்டையில் அதிகபட்சம்-50 மி.மீ, திருநெல்வேலி-35 மி.மீ, செங்கோட்டை-28 மி.மீ, சிவகிரி-10 மி.மீ, தென்காசி-22.4 மி.மீ, மூலக்கரைப்பட்டி- 16 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

நீர்பிடிப்பு பகுதியில் 3 தினங்களாக பெய்து வரும் மழையால் அணைகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு

விநாடிக்கு 262.82 கனஅடி, சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 190 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 209 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து 712.25 கனஅடி, மணிமுத்தாறு அணையில் இருந்து பிரதான கால்வாயில் 50 கனஅடி, தாமிரவருணியில் 200 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம்-64.75 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம்-72.67 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.95 அடி, கடனாநதி அணையின் நீர்மட்டம்-27.60 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம்-25 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 24.94 அடி, குண்டாறு அணையின் நீர்மட்டம்-11.80 அடி, அடவிநயினார் அணையின் நீர்மட்டம்-44.50 அடி, வடக்குப்பச்சையாறு அணையின் நீர்மட்டம்-24.60 அடி, நம்பியாறு அணையின் நீர்மட்டம்-13.02 அடி, கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம்-2.50 அடியாகவும் இருந்தது.

**தேனி மாவட்டத்தில் 2 நாள்களாக மழை**

தேனி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை முதல் 2 நாள்களாக பரவலாக சாரல் மழை பெய்தது.

மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் மே 6ஆம் தேதி முதல் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு இடி, மின்னலுடன் சாரல் மழை பெய்தது. இந்த மழை புதன்கிழமையும் நீடித்தது. அன்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு விவரம்: (மி.மீட்டரில்) சோத்துப்பாறை அணை நீர்பிடிப்பு பகுதி- 36, ஆண்டிபட்டி- 3, வைகை அணை- 21, தேனி- 7.8, வீரபாண்டி- 10, போடி- 21.8, பெரியகுளம்- 2 உத்தமபாளையம்- 13, கூடலூர்- 21, பெரியாறு அணை நீர்பிடிப்பு- 14, தேக்கடி- 15.4.

அணைகளின் நீர்மட்டம்:வைகை அணை நீர்மட்டம் புதன்கிழமை 31.30 அடியாகவும், நீர் வரத்து விநாடிக்கு 112 கன அடியாகவும் இருந்தது. மேலும், அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 110 அடியாகவும், நீர் வரத்து விநாடிக்கு 200 கன அடியாகவும் இருந்தது. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

உத்தமபாளையம்: உத்தமபாளையத்தில் புதன்கிழமை மாலை 4 மணி பெய்யத் தொடங்கிய மழை இரவு வரை நீடித்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இருந்து வரும் மழைநீர் ஓடைகள் வழியாக சென்று முல்லைப் பெரியாற்றில் சேரும். ஆனால் ஓடைகள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதால் வாரச்சந்தை மற்றும் பேருந்து நிறுத்தத்தை தண்ணீர் சூழ்ந்து கொண்டது. இதனால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்தனர்.

வட்டார வள மையத்துக்குள் புகுந்த மழைநீர்:சின்னமனூரில் புதன்கிழமை பெய்த மழைநீர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வட்டார வள மையத்துக்குள் புகுந்தது. இதையடுத்து அங்கு பணியில் இருந்த ஆசிரியர்கள் அலுவலக கோப்புகள் மற்றும் கணினிகளை பாதுகாத்தனர். பின்னர் அறைக்குள் புகுந்த நீரை அவர்கள் வெளியேற்றினர்.

போடி, தேவாரத்தில் மழை: போடி பகுதியில் புதன்கிழமை மாலை முதல் இரவு வரை தொடர்ந்து சாரல் மழை பெய்தது. இம்மழையால் தேர்தல் பிரசாரம் பாதிக்கப்பட்டது. ஆனாலும் சில வேட்பாளர்கள் நனைந்தபடி பிரசாரத்தில் ஈடுபட்டனர். அதே போல் தேவாரம் மேற்கு பகுதியில் உள்ள பிரம்புவெட்டி ஓடையிலும், தேவாரம் பிரதான சாலையிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த நீர் தேவாரத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள பெரியதேவி கண்மாயில் சேரும். ஆனால் தண்ணீர் செல்லும் பாதையில் சிலர் ஆக்கிரமிப்பு செய்திருந்ததால் போடி சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து பெருமாள்பட்டி கிராமத்துக்குள் புகுந்தது. இதனால் போடியிலிருந்து சென்ற வாகனங்கள்

தேவாரத்துக்குள் நுழைய முடியவில்லை. பின்னர் கண்மாய்க்குள் தண்ணீர் திருப்பி விடப்பட்டதும் போக்குவரத்து சீரானது.

### ரூ. 98 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 98 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,139 மூட்டைகளில் 1,88,000 கிலோ கொப்பரையை விற்பனைக்குக் கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 52.35-க்கும், அதிகபட்சமாக ரூ. 55.75-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 39.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 51.85-க்கும் விற்பனையானது. மொத்தம், ரூ. 98 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

### ரூ.6.18 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் புதன்கிழமை ரூ.6.18 லட்சத்துக்குப் பருத்தி ஏலம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பருத்தி வரத்து குறைந்து 427 மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.4800 முதல் ரூ.5330 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ.1800 முதல் ரூ.2200 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.6.18 லட்சத்துக்கு ஏலம் போனது. டி.சி.எச் ரகப்பருத்தி வரத்து இல்லை.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி,

புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 63 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 6 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

**நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி**

நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவம் என்ற தலைப்பில் பயிற்சி முகாம் வரும் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளது என கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் கோபாலகிருஷ்ணமுர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல்-திருச்சி சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் பண்ணையாளர்களுக்காக நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி வகுப்பு வரும் 17ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இந்த இலவச பயிற்சி முகாமில் பண்ணையாளர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

**தினமலர்**

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேனீக்களால் ஆன வேலி!



காட்டு யானைகள் தோட்டத்தில் புகுந்து பயிர்கள் நாசம் என்பது போன்ற செய்திகள் அடிக்கடி வருகின்றன. இந்த பிரச்னைக்கு மின்சார வேலிதான் தீர்வு என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், ஆப்ரிக்காவில் கிராமத்து விவசாயிகள் இயற்கையால் இயற்கைக்கு வேலி போட முடியும் என்பதை நடைமுறையில் நிரூபித்திருக்கின்றனர். யானைகளுக்கு இந்த தேனீக்களைக் கண்டால் ஆகாது. துதிக்கைக்குள்ளேயோ, காதுக்குள்ளேயோ போய் தேனீக்கள் கொட்டிவிட்டால் அந்த வேதனையை யானைகளால் தாங்க முடியாது. எனவே, கென்யாவின் கானக பகுதிகளை ஒட்டியுள்ள தோட்டப் பகுதிகளில், தேனீ வளர்ப்பு பெட்டிகளையும், தேனீக்கள் 'டம்மி' பெட்டிகளையும் தோட்டத்தின் எல்லையில் வேலிகள் போல அமைத்துக்கொள்கிறார்கள் விவசாயிகள்.தேனீக்களின் ரீங்காரத்தைக் கேட்டதுமே அந்தப் பகுதிக்குள் வராமல் யானைகள் திரும்பிப் போய்விடுகின்றனர். கானக அதிகாரிகளையும், டிவி கேமராக்களையும் கூப்பிடவேண்டிய அவசியமே

கென்ய கிராம விவசாயிகளுக்கு இல்லை! 'எலிபன்ட்ஸ் அண்ட் பீஸ்' என்ற அமைப்பு தேனீ வேலிகளை அமைத்துத் தர ஆலோசனையும், பொருட்களையும் தருகிறது. தேனீக்கள் உள்ள பெட்டிகளையும், வெற்றுப் பெட்டிகளையும் சில கம்பிகளால் இணைத்து தொடர்ச்சியாக தோட்டத்தின் எல்லையில் அமைத்து விடுகிறார்கள் விவசாயிகள்.

யானைகள் துணிந்து வந்து ஒரு பெட்டியை அசைத்தாலும், பல பெட்டிகளில் இருக்கும் தேனீக்கள் வெகுண்டு, நூற்றுக்கணக்கில் ரீங்காரம் இடும். உடனே யானைகள் ஓட்டமெடுத்து விடுகின்றன. இந்த திட்டத்திற்கு 80 சதவீத வெற்றி வாய்ப்பு இருப்பதாக இத்திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பு சொல்கிறது. நூறு மீட்டர் உள்ள தேனீ வேலிக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆனால், இதன் உபரி பலனாக, தேன் மற்றும் மெழுகு போன்ற பொருட்கள் விவசாயி களுக்கு கிடைக்கிறது. தவிர, பயிர் களுக்கான அயல் மகரந்த சேர்க்கை, வேலித் தேனீக்களால் வேகமாக நடக்கிறது. விளைச்சலும் அமோகமாக கிடைக்கிறது.

## 46,950 டன் நெல் கொள்முதல்

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், காரீப் பருவத்தில் விளைந்த நெல்லை கொள்முதல் செய்ய, 82 கொள்முதல் நிலையங்கள், கடந்த பிப்ரவரி மாதம் 22ம் தேதி முதல் செயல்பட்டு வருகின்றன.கடந்த பிப்ரவரி மாதம், 22ம் தேதி முதல், கடந்த 9ம் தேதி வரை, 22 ஆயிரத்து 282 விவசாயிகளிடம் இருந்து, 46 ஆயிரத்து 950 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 29ம் தேதி வரை கொள்முதல் செய்யப் பட்ட நெல்லுக்கு, 53.99 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. கடந்த 2014 - 15ம் ஆண்டில் காரீப் பருவத்தில், 22 நேரடி கொள்முதல் நிலையங்கள் மற்றும் இரண்டு நடமாடும் கொள்முதல் நிலையங்கள் என, 24 நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டன. இதன்மூலம், 18 ஆயிரத்து 353 டன் நெல்

கொள்முதல் செய்யப்பட்டதோடு, 1,916 விவசாயிகளுக்கு 26.84 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டது.

ஆனால், இந்தாண்டு அதைவிட மூன்று மடங்கு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அதிகளவு நெல் கொள்முதலும், பணப்பட்டுவாடாவும் செய்யப்பட்டு, விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.இவ்வாறு ஆட்சியர் கஜகலட்சுமி ெவளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

**முள் விளையும் பூமியில்... புல் வளர்க்கும் விவசாயி...**



ராமநாதபுரம் மாவட்டம், முள்செடிகள் வளரும் பகுதியாக வறட்சி பூமியாக உள்ளது. இங்கு கருவேல மரங்களை வளர்ப்பதே பிரதான தொழிலாக உள்ளது. வறட்சி பூமியில் விவசாயி ஒருவர், 'மிட்சிகன் கிராஸ்' என்ற அலங்கார புல் வளர்த்து சாதனை படைத்து வருகிறார். ராமநாதபுரம் அருகே திருப்புல்லாணி ஒன்றியம் நயினா மரைக்கான் கிராமத்தை சேர்ந்தவர் ஏ.ஆனந்தன்,65. இவர் தனது ஏழு ஏக்கர் விவசாய நிலத்தில், 'மிட்சிகன் கிராஸ்' என்ற அலங்கார புல் வளர்த்து வருவாய் ஈட்டி வருகிறார். பூங்காக்களில் தரையில் பசுமை கம்பளி போர்த்தியது போன்ற புல்தரை அமைப்பது இவரது கைவண்ணம். சென்னையில் நர்சரி நடத்தி வரும் இவரது சகோதரர்தான் இதற்கான

முதலீடுகளை செய்துள்ளதாக கூறும் விவசாயி ஆனந்தன், தனது தொழில் ரகசியம் குறித்து பகிர்ந்து கொள்கிறார்.

ஆனந்தன் கூறியதாவது: நிலத்தில் புல்வளர்த்து, ஒரு சதுர அடி ரூ.15க்கு விற்பனை செய்கிறோம். ஒரு சதுர அடி புல் வளர்க்க நடவு கூலி மட்டும் ரூ.2. தண்ணீர் பாய்ச்ச, களை பறிக்க என சதுர அடிக்கு ரூ.6 வரை செலவாகிறது. இந்த புல்வளர்ப்பு பணியில் 2 ஆண்கள், 17 பெண்கள் என, 19 பேர் வேலை செய்கின்றனர்.

சென்னை, தஞ்சாவூர், கோவை பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் புல் வாங்கி செல்கின்றனர். சென்னையில் உள்ள நர்சரிக்கு மட்டும் வாரம் ஒரு லோடு புல் எங்கள் வாகனத்திலேயே அனுப்பி வருகிறோம். சென்னையில் புல் தரை அமைப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். பொதுவாக கார்டன், பூங்கா அமைக்கும் போது புல்தரையும் அமைக்கின்றனர். அந்த வகைக்காக மட்டுமே முன்பு அதிகளவு வாங்கினர்.

இப்போது, அந்த நிலை மாறி வீடுகளில் புல்தரை அமைப்பதும், மாடிகளில் புல்தரை அமைப்பதும் அதிகரித்து வருகிறது. கோடை வெயிலின் வெப்பத்தில் இருந்து பாதுகாக்க இந்த புல்தரை அவர்களுக்கு உதவும் என்பதால் வீடுகளில் அதிகளவு வாங்குகின்றனர். மாடித் தோட்டங்களில் புல்தரை அமைப்பதால் வீட்டிற்கு குளிர்ச்சி கிடைப்பதுடன், மாடி புல்தரையில் காலார நடப்பது தனி சுகம் தரும். ஒரு புல்தரை அமைக்க குறைந்தது 6 முதல் 8 மாதங்கள் ஆகிறது. அப்போதுதான் நன்றாக வளர்ந்த புல்தரை நமக்கு கிடைக்கும். இப்பகுதியின் அருகே கடற்கரை இருந்தாலும் புல்தரை வளர்ப்பதில் பாதிப்பு இல்லை. இங்கு ஓரளவு தண்ணீர் நன்றாகவே உள்ளது. முள் வளரும் பூமியில் இப்படி புல்தரையை வளர்ப்பதில் பெருமையாக உள்ளது. இதன் மூலம் நல்ல லாபமும் கிடைக்கிறது என்றார். தொடர்புக்கு 97866 50895. **- எஸ். பழனிச்சாமி, ராமநாதபுரம்.**

## வறட்சியில் இருந்து பயிர் காக்கும் வழிகள்



இன்று நிலவும் வெப்பமான சூழல் பயிரில் பலவித சேதங்களை ஏற்படுத்தும். குறிப்பாக பூக்கள் மலட்டுத்தன்மையாகி விடுவதும், வறண்ட காற்றால் இலைகள் காய்ந்து விடுவதால் உடனடி நிவாரணம் எதுவும் செய்து பயிரைக்காப்பது அரிது. வறட்சி தாங்க உதவும் பலவித உத்திகள் இருந்தும், வந்த பின் காத்திட அவை உதவுவதில்லை என்பதே உண்மை.

தானிய பயிர்களில் வறட்சியை தாங்கும் தன்மையை விதை கடினப்படுத்துதல், விதை முலாம் பூசுதல், முளை கட்டிய விதை பயன்பாடு, உயிர் உரங்கள் பயன்பாடு, விதை நேர்த்தி மற்றும் அடி உரமாக பொட்டாஷ் இடுதல், ஆழக்கால், அகலக்கால் பாத்தி அமைந்து சாகுபடி, இரட்டை வரிசை சாகுபடி, ஊடுபயிர் சாகுபடி, பல் பயிர் சாகுபடி என பல உத்திகள் உள்ளன.

அடி உரமாக அதிக அளவு வறட்சி தாங்கிய, நன்கு மட்கிய தொழு உரம் இடுவதும், ஊட்டமேற்றிய தொழு உரம் பயன்படுத்துவதும் நல்லது.

காய்கறி பயிர்களில் வறட்சி தாங்கிட பொட்டாஷ் உரம் இடுதல் உதவும்.

வேர் வளர்ச்சி அதிகரித்திட அகோஸ் பைரில்லம் பயன்படுத்துவது அவசியம். இதனை திரவ வடிவிலும் வாங்கலாம். உயிர்ச்சத்து பெருகிட 'ஹியுமிக் ஆசிட்' ஒரு ஏக்கருக்கு 500 மில்லி பயன் படுத்தலாம்.

மண்புழு உரம் இடுதல் மற்றும் பஞ்சகவ்யா இடுதல் மிக சிறந்த முறையில் அனைத்து பயிரையும் காக்க உதவும். இதில் மண்புழு உரம் இடும்போது அரை அடி ஆழம் குழிதோண்டி உரத்தை இட்டு மூடினால் நல்ல பயன் பெறலாம்.

வாய்ப்புள்ள இடங்களில் காற்றை குறைத்திட தடுப்பான்கள், செயற்கையாக பசுமை வலைகள், நைலான் வலைகள் பொருத்துதல் நல்லது.

உயரமாக வளரும் சில்வர் ஓக், இளவம்பஞ்சு, முள் இல்லா மூங்கில், சீத்தா, நாவல் மற்றும் கொடுக்காப்புளி கன்றுகள் முதலியன நடுவதற்கு திட்டம் தீட்டி குழிகள் தோண்டி வைத்து மழை வரும்போது நடவு செய்யலாம்.

நிலப்போர்வை உத்தி மற்றும் நிறைய பயிர் கழிவுகளை மேற்பரப்பில் பரப்பியும் வறட்சியை சமாளிக்கலாம். **- பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலைப்பேட்டை, அலைபேசி: 98420 07125**

**'எலி'**



விவசாயிகளின் வீட்டிலும், வயலிலும், சேமிப்பு கிடங்குகளிலும் எலிகளின் தொல்லை அதிகம். விவசாயி பயிரிடும் தானியங்களை சேதப்படுத்தி இழப்பீட்டை ஏற்படுத்துவதில் எலிகள் மோசமானவை. ஆறு எலிகள் சேர்ந்து ஒரு மனிதன் உண்ணும் உணவை உண்டு அழிப்பதுடன் 20 மடங்கு உணவை வீணாக்குகின்றன. எலிகளால், பயிர்களின் விளைச்சல் பாதிப்பு சுமார் 25 சதவிகிதமும், உணவு தானியங்களை சேமித்து வைக்கும்போது 30 சதவிகிதம் இழப்பும் ஏற்படுகிறது. விவசாயிகளின் உழைப்பை சேதப்படுத்தி சேதம் விளைவிக்கின்ற எலிகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி தெரிந்து கொள்வோம்.

எளிய முறைகள்: பயிர் சாகுபடியின் தொடக்கத்திலும் எலிகளின் இனப்பெருக்க காலமான ஜனவரி முதல் மார்ச் வரையிலும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் எலிகளை அழிக்க சிறந்த காலமாகும். இந்த காலகட்டத்தில் வயல்களில் வரப்பு வளைகளை வெட்டி எலிகளை குட்டிகளுடன் சேர்த்து அழிப்பது மிகச் சிறந்த முறையாகும். அகலம் குறுகிய வரப்புகளை அமைத்தும், அவ்வப்போது வரப்புகளை சீரமைக்கும் எலிகள் வரப்புகளில் வளை தோண்டுவதை தடுக்கலாம். எலிகளை எளிதாக கவரும் வகையில் இருக்கும் வைகோல் போரை வயலுக்கு அருகாமையில் அமைத்தல் கூடாது. வைக்கால் போர், எளிதில் மறைந்து கொள்ள தகுந்த இடமாக அமைந்து, எலிகள் பெருக உதவுகிறது. எலிகளை உண்ணும் பறவைகள், ஆந்தைகள் அமரும் வகையில் வயல்களில் தென்னை மட்டையின் அடிப்பகுதியை தலைகீழாக நட்டு வைக்க வேண்டும். கிட்டிகள் அல்லது மூங்கில் கிட்டிகள் எலிகளை எளிதாக பிடிக்க நல்ல உத்தியாக பயன்படுத்தப்படு கிறது. விஷ உணவு வைத்தும் எலிகளை அழிக்கலாம்.

**- பே.இந்திராகாந்தி, வேளாண் துணை இயக்குனர், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், விநாயகபுரம், மதுரை**

**மாவட்டத்தில் பெய்த கோடைமழை**

கோபால்பட்டி:கோபால்பட்டி மற்றும் சாணார்பட்டி பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக கோடை மழை பெய்தது.

இப்பகுதியில் நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பகல் 2.30 மணியளவில் சாரல் மழை பெய்யத் துவங்கியது. சிறிது நேரத்தில் கனமழையாக மாறியது.

கோபால்பட்டி, சா ாணார்பட்டி, அஞ்சுகளிப்பட்டி, வேம்பார்பட்டி மற்றும் சிறுமலை அடிவார பகுதிகளில் தொடர்ந்து ஒரு மணி நேரம் மழை கொட்டியது. இதனால் இப்பகுதியில் குளிர்ச்சி நிலவியது. வெயிலுக்கு வாடி வதங்கி கொண்டிந்த 'மா' மரங்கள் மழை பெய்ததால் உயிர் பிடித்துள்ளன.

வெப்பத்தால் உதிரும் நிலையில் இருந்த மாங்காய்கள் தப்பித்து எடை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் இப்பகுதி 'மா' விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். மேலும் இப்பகுதியில் உள்ள சிறுமலை தொடர்ச்சியில் தொடர்ந்து 3 நாட்களாக மழை பெய்து வருவதால் காட்டு மாடு, பன்றி, மான் உள்ளிட்ட வன விலங்குகளின் தண்ணீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் நிலை உள்ளது.

வடமதுரை: வடமதுரையில் கடந்த நவம்பர், டிசம்பருக்குப்பின் ஐந்து மாதங்களாக அறவே இல்லை. மிகவும் வறண்ட வானிலையே காணப்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெப்ப சலனம் காரணம் மாலை நேரத்தில் மேகம் கருத்தாலும் மழையாக மாறாமல் இருந்தது. ஆனால் நேற்று மாலை 3.30 அளவில் துவங்கி ஒரு மணி நேரம் மழை பெய்தது. அக்னி வெயில் கொளுத்தும் கோடையில் பெய்த சுமாரான மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தாண்டிக்குடி: கடந்த வெள்ளி முதல் அடுத்தடுத்த தினங்களில் மழை பெய்தது. இதையடுத்து குடிநீர் ஆதாரங்களில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று மாலை 5 மணிக்கு துவங்கிய மழை இடை விடாது கனமழையாக பெய்து கொண்டே இருந்தது.

இதனால் மின்தடை ஏற்பட்டு தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதிகள் இருளில் இருந்தன. அவரை, சவ்சவ், பீன்ஸ் உள்ளிட்ட குறுவிவசாயப் பயிர்களும், மலை விவசாயப்பயிர்களான மலைவாழை, காபி, ஆரஞ்சு, மிளகு, ஏலம், கிராம்பு, அவகடா பயிர்களுக்கு இம்மழை ஏற்றதாக அமைந்துள்ளது.

**பயிர் வளர்ச்சிக்கு 'நீம்கோட்டட் யூரியா'**

திண்டுக்கல்:'நீம் கோட்டட் யூரியா'வை பயிர் வளர்ச்சிக்கு விவசாயிகள் பயன்படுத்தலாம்' என, வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார்ஆலோசனை வழங்கினார்.

திண்டுக்கல்லில் அவர் தெரிவித்ததாவது: பயிர்களின் வளர்ச்சிக்கு தழைச்சத்து அவசியம். யூரியாவில் 46 சதவீதம் தழைச்சத்து உள்ளது. அமோனியா எனும் வேதிப்பொருளில் இருந்து தயாரிப்பதால், காற்றில் கரையும் தன்மை உள்ளது. யூரியாவில் தழைச்சத்து ஆவியாகும் தன்மை கொண்டதால், பயிர்களுக்கு இடும்போது 25 சதவீதம் வரை இழப்பு ஏற்படுகிறது.

இதனை சரிசெய்ய நீம்கோட்டட் யூரியாவை (வேப்ப எண்ணெய் கலந்த யூரியா) தயாரிக்கும்படி நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.இதனால் யூரியாவின் அளவில் 15 சதவீதம் வரை அளவை குறைத்து இடலாம். இந்த யூரியாவில் உள்ள வேம்பு மண் மூலம் பரவும் நோய்கள், பூச்சிகள் மற்றும் புழுக்களுக்கு எதிராக செயல்பட்டு பயிருக்கு பாதுகாப்பு அளிக்கிறது. யூரியாவை காட்டிலும் வேப்ப எண்ணெய் கலந்த யூரியா சிறப்பான பயனளிக்கும்.

இனி வரும் காலங்களில் விவசாயிகள் வேப்ப எண்ணெய் கலந்த யூரியாவை வாங்கி பயன்படுத்தலாம். 50 கிலோ மூடை ரூ.284 க்கு விற்பனை செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என, தெரிவித்தார்.

## ரோஜா விலை குறைந்தது

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால், ரோஜா விலை குறைந்து கிலோ ரூ.40 க்கு விற்பனையானது.

திண்டுக்கல், நிலக்கோட்டை, ரெட்டியார்சத்திரம், வடமதுரை, ஒட்டன்சத்திரத்தில் 221 எக்டேரில் ரோஜா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து மதுரை, திருச்சி, நெல்லை மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு தினமும் ஆயிரம் கிலோ முதல் 2 ஆயிரம் கிலோ வரை விற்பனைக்கு வரும். சென்ற மாதம் ரோஜா கிலோ ரூ.80 முதல் 120வரை விற்றது. தற்போது வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்து நேற்று ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரை விற்பனையானது.

## மாவட்டத்தில் தொடருது கோடை மழை

தேனி: மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கத்தால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். நான்கு நாட்களாக சீதோஷ்ண நிலை மாறி பகலில் வெயில் சுட்டெரித்தாலும் மாலையில் பரவலாக மழை பொழிந்து வருகிறது.

நேற்றுகாலை 8.30 மணிப்படி மழையளவு: ஆண்டிபட்டி 3, அரண்மனைப்புதுார் 7.8, போடி 21.8, கூடலுார் 21.8, பெரியகுளம் 2, பெரியாறு அணை 14, சோத்துப்பாறை அணை 36, தேக்கடி 15.4, உத்தமபாளையம் 19, வைகை அணை 2.6, வீரபாண்டி 10 மி.மீட்டர் மழை பதிவானது.

அணைகளின் நீர் மட்டம்: வைகை அணை நீர் மட்டம் 31.30 அடியாக (அணையின் மொத்த உயரம் 71) உள்ளது.அணைக்கு வினாடிக்கு 112 கனஅடிநீர் வரத்தும், 60 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பெரியாறு அணை நீர் மட்டம்110 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 200 கன அடிநீர் வரத்து, அதே அளவில் வெளியேற்றப்படுகிறது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 34 அடியாக உள்ளது. நீர் வரத்து, வெளியயேற்றம் இல்லை.

சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 86.92 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 20 கன அடி நீர் வரத்தும், வினாடிக்கு 3 கனஅடிநீர் வெளியேற்றப்படுகிறது. சண்முகாநதி அணை நீர் மட்டம் 26.25 அடியாக உள்ளது. நீர் வரத்து, வெளியேற்றம் இல்லை. மழையால் அணைகளின் நீர்மட்டம் சிறிது உயர்ந்துள்ளது.

தேவாரம்: தேவாரத்தில்கோடை மழை பெய்யாததால் மானாவாரி நிலங்களில் விதைக்காமல் விவசாயிகள் தவிர்த்தனர். கடந்த இரண்டு நாட்களாக பலத்த மழை பெய்தது. நேற்று மாலை ஒரு மணி நேரம் பெய்த மழையால் வெப்பம் நீங்கி குளிர்ச்சி நிலவியது.

* சின்னமனுாரில் நேற்று மாலை 3.30 மணிக்கு துவங்கிய மலை 5.30 வரை நீடித்தது. பலத்த மழையால் சீப்பாலக்கோட்டை ரோட்டில் கண்ணாடிகடை முக்கு பகுதியில் வெள்ளநீர் சென்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தேவாரம் பெரியதேவி கண்மாயில் மீன் குத்தகை எடுத்தவர்கள் தண்ணீர் செல்லும் பாதையில் தடை ஏற்படுத்தியதால், பெரம்புவெட்டி ஓடையில் வந்த வெள்ளநீர் மறுகால் வழியாக வெளியேறி குடியிருப்புகளுக்குள் சென்றது. தேவாரம்- - போடி ரோட்டில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியதால் அரைமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கோடை மழை : மக்கள், விவசாயிகள்மகிழ்ச்சி




திண்டுக்கல்: தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பெய்த கோடை மழை மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், இடையகோட்டை, முத்துநாயக்கன்பட்டி, உள்ளிட்ட பல கிராமங்களில் நேற்று பலத்த காற்றுடன் சுமார் 1 மணி நேரம் மழை வெளுத்து வாங்கியது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியது. இதே போல் சேலம் மாவட்டம் வாழப்பாடி, சிங்கப்புரம், வெள்ளாளகுண்டம், ஆகிய பகுதிகளில் பலத்த காற்று, மற்றும் இடி, மின்னலுடன் மழை கொட்டி தீர்த்தது.

திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை, மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து மாலை, மற்றும் இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. கத்திரி வெயில் வாட்டி வகைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீர் மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதே போல் தமிழகத்தில்

பல்வேறு இடங்களில் பரவலாக நேற்று மழை பெய்ததால் குளிர்ந்த சீதோஷ்ணநிலை ஏற்பட்டது.

**குன்னூரில் கனமழை**

குன்னூர், : குன்னூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2 நாட்களாக மாலை நேரத்தில் பரவலான மழை பெய்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு மேல் குன்னூர், அருவங்காடு, வெலிங்டன், சேலாஸ், கக்காச்சி, கிளிஞ்சடா, தூதூர்மட்டம், கொலக்கம்பை, உட்லாண்ட்ஸ், அறையட்டி, ஆருக்குச்சி உள்ளிட்ட பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

இந்த திடீர் மழையால் நீராதார பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மேலும் மலைக்கோட்ட காய்கறி விவசாயம் மட்டுமல்லாமல் தேயிலை விவசாயத்திற்கும் இந்த மழை பயனுள்ளதாக இருந்தது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடும் வெயிலுக்கு இடையே மழை அதிகளவில் பெய்ததால் குன்னூர் பஸ் நிலைய பகுதியில் ஐயப்பன் கோயில் சாலையில் இருந்து கழிவுநீர் கால்வாய் வழியாக வந்தது.

அப்போது தண்ணீர் வேகமாக வந்ததால் பஸ்நிலையம் முன்பு சாலையின் அடியில் சென்ற கழிவுநீர் கால்வாய் திடீரென உடைந்து சாலையில் விரிசல் ஏற்பட்டது. இதனால் இவ்வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்குள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் இதுகுறித்து உடனடியாக ஆய்வு செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென நகர மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## ரூ.9 ஆயிரத்துக்கு இளநீர் ஏலம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி அருகே உள்ள திப்பம்பட்டி இளநீர் வணிக வளாகத்தில் நேற்று இளநீர் ஏலம் நடைபெற்றது. இதில் இரண்டு விவசாயிகள் 430 இளநீர் கொண்டு வந்திருந்தானர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் செல்வராஜ், மேற்பார்வையாளர் மணிவண்ணன், வோளாண் வணிக உதவி அலுவலர் செந்தில் முன்னிலையில் இளநீர் ஏலம் விடப்பட்டது.

இதில், ஒரு இளநீர் அதிகபட்சமாக ரூ.21.10க்கு என மொத்தம் ரூ.9 ஆயிரத்துக்கு ஏலம்போனது. சில வாரங்களுக்கு முன்பு ஒரு இளநீர் அதிகபட்சமாக ரூ.20 வரை விலைபோனது. ஆனால், நேற்று நடந்த ஏலத்தின்போது அதிகபட்சமாக ரூ.21.10க்கு விலைபோனது என்றும், வரும் வார ஏலநாளில் விலை உயர வாய்ப்புள்ளது என அதிகாரிகள் தொவித்தனர்.

## கோடை காலத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை

நாகை, : கோடை காலத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோடை காலத்தில் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் கீழ்கண்ட தொழில்நுட்ப ஆலோசனை கடைப்பிடித்து அதிக மகசூலை பெறலாம். கோடை காலத்தில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்க வைக்கோலை நிலம் முழுவதும் பரப்பி மூட வேண்டும்.

குமாய் கிணற்று பாசன வசதி உள்ள இடங்களில் மாலை வேளைகளில் பாசனம் மேற்கொள்வதால் நிலத்தின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுவதுடன் நிலத்தின் தட்பவெப்ப நிலையும் பாதுகாக்கப்படும். கோடை மழை நீரை

வீணாக்காமல் நிலத்தில் சேர்க்க நிலத்தில் அளவிற்கு குறுக்காக கோடை உழவு செய்ய வேண்டும். சிக்கன நீர் பாசனத்தை மேற்கொண்டு பாசன நீரை சேமிக்க, சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசன கருவிகளை பயன்படுத்த வேண்டும். ரசாயன உரங்களை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன கருவிகள் மூலம் அளிக்கும்போது உரம் மற்றும் நீர் சிக்கனம் ஏற்படும். நுண்ணூட்ட உரங்களை இலைவழி தெளிப்பதால் உரங்கள் முழுமையாக பயிர்களுக்கு கிடைக்கும். கோடை காலத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.

விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் கோடை காலத்தில் காலை, மாலை வேளைகளில் மட்டுமே விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் வெப்பத்தின் தாக்கத்தால் ஏற்படும் உடல் உபாதைகளை தவிர்த்து கொள்ளலாம். விவசாயிகள் கால்நடைகளை நிழலான இடங்களில் வைத்து பராமரிப்பதுடன், அவற்றுக்கு போதிய அளவு குடிநீர் வசதி செய்து தர வேண்டும். காலை, மாலை வேளைகளில் மட்டும் மேய்ச்சலுக்கு அழைத்து செல்ல வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கும்பக்கரை அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு

பெரியகுளம், : பெரியகுளம் அருகே 8 கி.மீ தொலைவில் கும்பக்கரை நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த அருவியில் கடந்த சில தினங்களாக கடுமையான வெயில் காரணமாக நீர்வரத்து இல்லாமல் வறண்டு கிடந்தது. இதனால், சுற்றுலாப்பயணிகளை வனத்துறையினர் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், கடந்த நான்கு தினங்களாக பெரியகுளம் பகுதியில் பெய்த கனமழை காரணமாக கும்பக்கரை அருவியில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் குளிக்க தடை நீக்கம் செய்யப்பட்டு சுறறுலாப்பயணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த தகவலை வனச்சரகர் சந்துரு தெரிவித்தார்.

**வி.கே.புரத்தில் இடியுடன் மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

வி.கே.புரம், : வி.கே.புரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஒரு மணி நேரம் இடியுடன் கனமழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.நெல்லை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் துவங்கும் முன்பே வெயில் வாட்டி எடுத்து வந்தது. பகல் வேளையில் மக்கள், வீட்டைவிட்டு வெளியே வரவே அஞ்சினர். ஒரு மாதத்துக்கும் மேலாக 100 டிகிரியை தாண்டி கொளுத்திய வெயில், கடந்த 9ம் தேதி 100 டிகிரிக்குள் பதிவானது.

இந்நிலையில் வெப்ப சலனம் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. வி.கே.புரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மதியம் 2.45 மணியிலிருந்து 3.45 மணிவரை இடியுடன் கூடிய மழை பெய்தது. கனமழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் காணப்பட்டது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.மாவட்டத்தின் முக்கிய அணையான பாபநாசம் நீர்மட்டம், நேற்றைய நிலவரப்படி 65.70 அடியாக இருந்தது. வினாடிக்கு 145.95 கனஅடிநீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 704.75 கனஅடிநீர் வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 73.56 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர் மட்டம் 81 அடியாகவும் உள்ளது. மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு 164 கனஅடிநீர் வந்து கொண்டிருக்கிறது. 250 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

மழையளவு விவரம் வருமாறு: கடனா நதி 1 மிமீ, ராமநதி 20 மிமீ, கருப்பாநதி 4 மிமீ, கொடுமுடியாறு 50 மிமீ, அடவிநயினார் 2 மிமீ, அம்பை 1.40 மிமீ, ஆய்க்குடி 10.20 மிமீ, சேரன்மகாதேவி 2 மிமீ, நான்குநேரி 5 மிமீ, பாளை 5 மிமீ, ராதாபுரம் 4.20 மிமீ, சங்கரன்கோவில்

4 மிமீ, செங்கோட்டை 2 மிமீ, சிவகிரி 1 மிமீ, தென்காசி 6.40 மிமீ, நெல்லை 1 மி.மீ.

## குமரியில் இடி மின்னலுடன் கன மழை

நாகர்கோவில், குமரி மாவட்டத்தில் இடி, மின்னலுடன் நேற்று கனமழை பெய்தது.குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வந்த நிலையில் தொடர்ந்து சாரல் மழை பெய்ய ெதாடங்கியுள்ளது. நேற்று பகல் இடி மின்னலுடன் கன மழை கொட்டியது.மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை காணப்பட்டது. நாகர்கோவில் பகுதியில் பெய்த கனமழை காரணமாக சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆசாரிபள்ளம் அனந்தன்நகர்-வடக்குகோணம் சாலையில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.மாவட்டத்தில் அதிகபட்சமாக சிற்றார்-1ல் 72.4 மி.மீ மழை பதிவாகி இருந்தது.

பேச்சிப்பாறையில் 54.4, பெருஞ்சாணி 21.6, சிற்றார்-2ல் 44.8, இரணியல் 4.2, ஆனைக்கிடங்கு 6.2, அடையாமடை 5, முள்ளங்கினாவிளை 13, புத்தன் அணை 22.2, திற்பரப்பு 8.4, பூதப்பாண்டி 7.5, பாலமோர் 22.4 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.80 அடியாக இருந்தது. அணைக்கு 297 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 61.90 அடியாக இருந்தது. அணைக்கு 27 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்-1ல் 5.31 அடியும், சிற்றார்-2ல் 5.41 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. பொய்கையில் 18.20 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 46.34 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

**நாகலாபுரத்தில் பலத்த காற்றில் மரங்கள் சாய்ந்தன**



விளாத்திகுளம் அருகே உள்ள நாகலாபுரம் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று மதியம் பலத்த காற்றுடன் சுமார் அரை மணி நேரம் மழை பெய்தது. இதனால் அப்பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த சுமார் 100 வாழைகள் முறிந்து சேதம் அடைந்தன.

அப்பகுதியில் உள்ள காளி அம்மன் கோவிலுக்கு முன்புள்ள வேப்ப மரம் சாய்ந்து, கோவில் கொட்டகையில் விழுந்தது. மேலும் அந்த பகுதியில் சில வேப்ப மரங்கள் சரிந்து, அருகில் உள்ள வீடுகளின் மீது விழுந்தது.

அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலும் 2 மின் கம்பங்களும் சாய்ந்தன.

உடனே மின்வாரிய பணியாளர்கள் விரைந்து வந்து, மின் இணைப்பை துண்டித்தனர். சேதம் அடைந்த மின் கம்பங்களை அகற்றி விட்டு, புதிய மின் கம்பங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.